*DEPOSITION OF WITNESS*
*(Chapter XXV BNSS)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT*
*Mannargudi*
*CC.No. 167/2021 – P.W. 7 - (LW2)*

| | |
|---|---|
| *Name* | கனிமொழி |
| *Father/Husband's Name* | த/பெ. தர்மராஜன் |
| *Village* | வடுவூர் சாத்தனூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 34 |

**1,2 எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 16.02.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன்.

கடந்த 06.04.2021 ஆம் தேதி இரவு 9.00 மணியளவில் செருமங்கலம் , உடையார் தெருவில் தேர்தல் பணி முடித்து விட்டு நானும் அசா 1 புனிதாவும் இருசக்கர வாகனத்தில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தோம். அப்போது நாங்கள் சென்ற அதே திசையில் எங்களுக்கு பின்னால் வந்த இரண்டு நபர்கள் கருப்பு நிற பதிவு எண் இல்லாத பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்து அசா.1 புனிதா கழுத்தில் இருந்த 5 பவுன் மதிப்புள்ள தாலிச்செயினை அறுத்து விட்டு வடுவூர் நோக்கி சென்று விட்டனர். ஆஜர் எதிரிகள்தான் மேற்படி வாகனத்தில் வந்து செயினை அறுத்தனர். எதிரி சக்திவேல் பின்னால் அமர்ந்திருந்தார், எதிரி ரகு இருசக்கர வாகனத்தை ஓட்டினார் . செயினை யார் அறுத்தது என்று தெரியவில்லை .(சாட்சி மீண்டும் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்தவர்தான் செயினை அறுத்ததாக கூறினார் ) . எதிரிகள் செயினை அறுத்ததில் அசா 1 கீழே விழுந்ததில் வலது பக்க கையில் அடிப்பட்டது , அருகில் இருந்த ராஜேந்திரன் என்பவர் உதவியுடன் அசா1 ன் கணவர் அங்கு வந்து

அசா1ஐ மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். மறு நாள் காலை அசா 1 காவல்நிலையம் சென்று புகார் அளித்தார். இது சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) அசா 1 புனிதா எனது ஊர்க்காரர், உறவுக்காரர் என்றால் சரிதான். 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலுக்காக அன்றைய நாளில் நான் கிரிமிநாசினியினை வாக்களிக்க வரும் நபர்களுக்கு கொடுப்பதுதான் எங்கள் பணி என்றால் சரிதான்.

2) அசா 1 புனிதாவிற்கும் அதே பணிதான். வாக்குப்பதிவு 5.30 மணிக்கு முடிந்து விடும் என்றால் சரிதான். அதன்பிறகு பூத்முகவர்கள், பிரிசிடிங் ஆபீசர் , பெட்டிகளை சீல் வைத்து மேற்படி பெட்டிகளை ரிட்டனிங் ஆபீசருக்கு அனுப்பி வைத்துவிடுவார்கள் என்றால் சரிதான். அன்றை தினம் 6 மணிக்கெல்லாம் எங்கள் பணி முடிந்து விட்டது என்றால் சரிதான்.

3) எங்கள் ஊர் செருமங்கலத்தில் இருந்து சுமார் 10 கி.மீ துாரத்தில் இருக்கும் என்றால் சரிதான். முதல் விசாரணையில் அசா 1 புனிதாவிற்கு காயம் ஏற்பட்டதாகவும், அது தொடர்பாக வடுவூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை எடுத்துக்கொண்ட விஷத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

4) என்னை யாரும் தாக்கினார்களா? என்றால் என்னை யாரும் தாக்கவும் இல்லை, எனக்கு காயமும் ஏற்படவில்லை. புனிதாவை அழைக்க சுமார் எத்தனை மணிக்கு கரிகாலன் வந்திருப்பார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எத்தனை மணி என்று நான் சரியாக கவனிக்கவில்லை, அவர் வந்தவுடன் கிளம்பிவிட்டோம்.

5) வடுவூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிகிச்சைக்கு செல்லும்போது சுமார் மணி எத்தனை இருக்கும் என்றால் 9.30 லிருந்து 9.45 மணி இருக்கும். வடுவூர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து , வடுவூர் காவல்நிலையம் கொஞ்ச துாரம் இருக்கும், சரியாக சொல்லதெரியவில்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்., ஏ., படித்திருக்கிறேன். மீட்டர் , அடியெல்லாம் எனக்கு வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும். வடுவூர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து , வடுவூர் காவல்நிலையம் 300 மீட்டருக்குள்தான் இருக்கும் என்றால் சரியல்ல. எங்கள் திசையிலேயே செயினை அறுத்தவர்கள் வந்தார்கள் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன், நம்பர் பிளேட் இல்லை என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியிருக்கிறேன். வண்டி வேகமாக சென்றதால்தான் செயினை அறுத்தது யார் என்று முதல் விசாரணையில்

சொல்லவில்லை என்றால் வண்டி வேகமாகதான் சென்றது நான் அவர்களை பார்த்தேன். மேற்படி தகவல்கள் தற்பொழுது தவறாக என்னால் புகர்த்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவத்தில் செயினை அறுத்ததாக சொல்லப்படும் நபர்கள் இருவர் ெ ஹல்ெ மட் அணிந்திருந்தார்களா என்றால் இல்லை. நான் காவல் நிலையத்தில் வைத்து எதிரிகளை பார்தேனா என்றால் பார்த்தேன்.

எதிரிகளை இந்த வழக்கோடு தொடர்புபடுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றால் உண்டு. சாட்சியம் அளிப்பதற்கு முன்பு வழக்கு ஆவணங்களை படித்து பார்த்து தான் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் இல்லை. உண்மை நிலையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.